**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 22.01.2026

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண் அலுவலர்களுக்கு பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை, தமிழ்நாடு அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறையுடன் இணைந்து "பல்வேறு பயிர்களுக்கு மண் வளத்திற்கும் பயிர் மகசூல் இலக்கிற்கும் ஏற்ற உரப் பரிந்துரைகள்" குறித்த மண் பரிசோதனை ஆய்வகத்தில் பணி புரியும் வேளாண் அலுவலர்களுக்கான பயிற்சித் திட்டத்தின் (தொகுதி II) தொடக்க விழாவினை ஜனவரி 21, 2026 அன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர், முனைவர். து. செல்வி, அவர்கள் கூட்டத்தினரை வரவேற்று, நிலையான விவசாயத்தை ஊக்குவிப்பதிலும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதிலும் மண் வளத்திற்கும் பயிர் மகசூல் இலக்கிற்கும் ஏற்ற உரப் பரிந்துரை தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். தொடக்க அமர்வின் போது, பயிற்சி பெறுபவர்கள், தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு, மண் பரிசோதனை ஆய்வகங்கள் மற்றும் நடமாடும் மண் பரிசோதனை ஆய்வகங்களில் மண் பகுப்பாய்வு மற்றும் ஆலோசனை சேவைகளில் தங்கள் தற்போதைய செயல்பாடுகள் குறித்த கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

முனைவர் அர.சாந்தி, முன்னாள் இயக்குநர், இயற்கை வள மேலாண்மை இயக்குநரகம் மற்றும் முன்னாள் பேராசிரியர் மற்றும் தலைவர், மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை மற்றும் முதல்வர், அதியமான் வேளாண் கல்லூரி, கிருஷ்ணகிரி அவர்கள் பாராட்டுரை நிகழ்த்தினார். 1980களில் இருந்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மண் பரிசோதனை முயற்சிகளின் பரிணாம

வளர்ச்சியை அவர் கோடிட்டுக் காட்டினார், மண் வளத்திற்கும் மனித ஆரோக்கியத்திற்கும் இடையிலான நெருங்கிய தொடர்பை அவர் வலியுறுத்தினார், மண் பரிசோதனை மற்றும் மண் வள மேம்பாட்டில் திரு. லட்சுமிநாராயணன், திரு. எம்.என். முனுசாமி மற்றும் திரு. தனபாலன் மோசி உள்ளிட்ட முன்னாள் நிபுணர்களின் பங்களிப்புகளை அவர் எடுத்துரைத்தார். 2021 பெருந்தொற்று காலத்தில், தமிழ்நாடு முதன்மைச் செயலாளருடனான (வேளாண்மை) தொடர்புகள், தற்போதைய பயிற்சித் திட்டத்திற்கு வழி வகுத்தன என்பதையும் அவர் குறிப்பிட்டார். மேலும் இளம் வேளாண் அலுவலர்களுக்கு இதுபோன்ற திறன் மேம்பாட்டு பயிற்சிகளைத் தொடர வலியுறுத்தினார்.

இயற்கை வள மேலாண்மை இயக்குநர் முனைவர்.ப.பாலசுப்பிரமணியம், அவர்கள், தனது துவக்க மற்றும் தலைமை உரையில் நிலையான விவசாயத்தில் மண் பரிசோதனையின் முக்கிய பங்கை வலியுறுத்தினார். பசுமைப் புரட்சியிலிருந்து நவீன சாகுபடிகள் வரை உரப் பயன்பாட்டுத் திறனில் ஏற்பட்ட மாற்றங்களை அவர் விவரித்தார். மேலும் சமநிலையற்ற உரப் பயன்பாட்டின் சுற்றுச்சூழல் விளைவுகளை அடிக்கோடிட்டுக் காட்டினார். உரங்கள் மற்றும் கரிம உரங்களின் ஒருங்கிணைந்த பயன்பாட்டின் அவசியத்தை அவர் எடுத்துரைத்தார். மண் பரிசோதனை அடிப்படையிலான உரப் பரிந்துரை மற்றும் மகசூல் இலக்கு அணுகுமுறைகளை பின்பற்ற வலியுறுத்தினார். இதுவரை 37 பயிர்களுக்கும் 10 பயிர் சுழற்சிகளுக்கும் மண் பரிசோதனை அடிப்படையிலான உரப் பரிந்துரை சமன்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், தமிழ்நாட்டின் பிற முக்கிய பயிர்களுக்கும் மண் பரிசோதனை அடிப்படையிலான உரப் பரிந்துரை சமன்பாடுகளை உருவாக்க விஞ்ஞானிகளை ஊக்குவித்தார்.

இறுதியாக, முனைவர். சு. மரகதம், பேராசிரியர் (மண்ணியல்) மற்றும் மண் வளத்திற்கும் மகசூல் இலக்கிற்கும் ஏற்ற உரப் பரிந்துரை திட்டத்தின் பொறுப்பாளர் நன்றியுரை வழங்கினார்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***